**இலங்கை வயம்ப பல்கலைக்கழ - 2020**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 107(5) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்வி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கல்வி பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு

உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்ககழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.5.1 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 22 நிருமாணிப்பு கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதாக 2019 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மொத்த பெறுமதி ரூபா.**32,200,139** ஆன பற்றுச்சீட்டுகளின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை கொடுப்பனவுகளை மேற்கொள்ளப்படவில்லை. | 22 கருத்திட்டங்களில் 2 இற்கு 2021 ஆரம்ப காலத்தில் கொடுப்பனவு செய்துள்ளதுடன், 4 கருத்திட்டங்கள் பொருட்டு நிருமாணிப்புகளின் குறைப்பாடுகளை சரியாக மேற்கொள்ளும் வரை வேலை பொறியியலாளரால் கொடுப்பனவுகளை பரிந்துரை செய்யாமை, கருத்திட்டத்தின் இறுதி பற்றுச்சீட்டுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமையால் கொடுப்பனவு செய்யப்படவில்லை. 16 கருத்திட்டங்களின் பற்றுச்சீட்டுகள் பேணல் பிரிவால் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. | தாமதமின்றி கொடுப்பனவுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டின் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.68,492,160 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. .205,502,778 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.137,010,618 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு மீளாய்விற்கான ஆண்டின் மீண்டுவரும் அரசாங்கத்தின் அளிப்புகள் அதிகரித்தல், உடன்படிக்கை சேவைகள், பராமரிப்புகள் மற்றும் மகாபொல புலமைப்பரிசில் செலவினங்கள் குறைவடைதலும் காரணமாகியது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழகத்திற்கு தேவையான காணிகள், கட்டிடங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மீளாய்விற்கான ஆண்டில் பொது திறைசேரியிடமிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா.மில்லியன் 13.5ஆன ஒதுக்கீட்டு தொகை ஆண்டு இறுதியிலும் எதிர்பார்க்கப்பட்ட அலுவல்களின் பொருட்டு உபயோகப்படுத்தியிருக்கவில்லை. | 2020 ஆண்டு இறுதியில் கொள்வனவு செய்வதற்கு ஏற்புடையதான பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பெறுகை திட்டத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பல்கலைக்கழகத்திடம் காணி-களை கையகப்படுத்துவதற்காக பன்னல மற்றும் குளியாபிட்டிய பிரதேச செயலாளர்களிடம் ஒழுங்குமுறையில் 2013 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் ரூபா.17,513,750 ஐ செலுத்தப்பட்டிருப்பினும், மீளாய்-விற்கான ஆண்டு இறுதி வரையும் குறித்த காணியை கையகப்படுத்தியிருக்கவில்லை. | காணிகளை கையகப்படுத்தும் சட்டத்தின்படி காணியின் உரித்தினை உறுதிப்படுத்துவத-ற்காக குளியாபிட்டிய மேற்கு பிரதேச செயலாளரால் குளியாபிட்டிய மாவட்ட நீதிம-ன்றத்தில் வழக்கு தொடரப்-பட்டுள்ளதுடன், அந்த வழக்கு முடிவடையும் வரை காணியை கையகப்படுத்துவதற்கு இயலா-துள்ளது. காணி கையகப்ப-டுத்தல் சட்டத்தின் V ஆவது பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டு-ள்ளதுடன், காணி கையகப்ப-டுத்தல் பணிகள் பன்னல பிரதேச செயலாளரால் மேற்-கொள்ளப்பட்டு வருகிறது. | காணிகளை கையகப்ப-டுத்தும் நடவடிக்கை-களை தாமதமின்றி மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| ஓராண்டுக்கு அதிகமான காலம் தொடக்கம் இருந்து வரும் வழங்கல் பணிகளை மேற்கொள்கின்ற மூன்று கடனாளிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா. 11,062,012 ஐ மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை சீராக்கப்படவில்லை. | உரிய பணிக்காக தற்போதுள்ள குறைப்பாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரை-யாடல்களை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், குறித்த பிரச்சினை-களுக்கு தீர்வு காணப்பட்டதன் பின்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறைப்பாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 நிதியங்களின் குறைப்பாய்னபாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| "The assessment of water and sediment quality and associated sea urchin of the gulf of manner coastline" கருத்திட்டத்தின் பொருட்டு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மூலம் 2014 மற்றும் 2016 ஆண்டுகளில் ரூபா. 3,437,160 ஐ வழங்கியிருப்பினும். அதில் ரூபா.1,170,721 ஆன தொகையை மட்டும் செலவிடப்-பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் | ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் கருத்திட்டம் பொருட்டு வழங்கி-யிருந்த ஒதுக்கீடுகளிலிருந்து எஞ்சிய தொகைக்காக, சம்பந்-தப்பட்ட கருத்திட்டத்திற்கு பொறுப்பான அதிகாரியால் வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டு-ள்ளதுடன், அதற்காக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் அனுமதி பெற்றுக்-கொண்டதன் பின்னர் எஞ்சிய பணத்தொகை குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. | கருத்திட்டத்தில் எதிர்பார்க்-கப்பட்ட நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்கு பணியாற்றுதல் வேண்டும். |

திசெம்பர் 31 ஆந் திகதியில் உரிய கருத்திட்டம் முடிவுறுத்தப்படவில்லை என்பதுடன், 04 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தொடக்கம் ரூபா.2,266,439 குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### 3.4 பயனற்ற அல்லது குறைபயன்பாட்டுடன் கூடிய ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| குளியாபிட்டிய மற்றும் மாகந்துர வளாகத்தில் ரூபா.41,825,013 ஐ செலவிடப்பட்டு நிருமாணிக்கப்பட்ட 4 வீடுகளை 2019 ஆண்டு தொடக்கம் கணக்காய்வு திகதியான 2021 ஆம் ஆண்டு பெப்ருவரி 17 ஆந் திகதி வரை பயன்படுத்தாது காணப்பட்டது. | நிருமாணிக்கப்பட்டுள்ள சில வீடுகளில் சமையல் அறையில் சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டமையாலும், உரிய வீட்டு தளவாடங்களை கொள்வனவு செய்கின்ற நடவடிக்கைகளை அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டமையாலும் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது. | குறைப்பாடுகளை பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.5 கருத்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| வயம்ப பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் தங்குமிட தொகுதிக்கு முழுமையாக மின் இணைப்பு வழங்குதலை மேற்கொள்வதற்காக 2020 சனவரி 16 ஆந் திகதி மின்சார சபையிடம் ரூபா.4,293,155 ஐ செலுத்தியிருப்பினும், ஆண்டு இறுதியில் அந்தப் பணியை முடிவுறுத்தப்படவில்லை. | மருத்துவ பீடத்தின் தங்குமிட தொகுதிக்கு ட்ரான்ஸ்போர்மர் பெற்றுக்கொள்வதற்காக மின்சார சபையிடம் பணம் செலுத்தியிருப்பினும், எதிர்பார்க்கப்பட்டவாறு மீளாய்விற்கான ஆண்டில் இப் பணியை முடிவுறுத்துவதற்கு முடியவில்லை. | பணியை முடிவுறுத்தப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |